


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.02.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் 2091 கோடி ரூபாய் முதலீட்டில், 2104 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் அமைத்துள்ள, அறைகளுக்கான குளிர்சாதன இயந்திரங்கள் (Room Air Conditioners) மற்றும் காற்றழுத்தக் கருவிகள் (Compressors) உற்பத்தி ஆலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர்நா. முருகானந்தம், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஆகியோர் கலந்து கொண்டனர். காணொலிக் காட்சி வாயிலாக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கோவிந்தராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் குழுமத் தலைவர்மசாஃபுமி அண்டோ, மிட்சுபிஷி எலக்ட்ரிக் சிங்கப்பூர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தோஷிமிட்சு இட்டோ, மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்திய நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்அட்சுஷி டகாசே, பொது மேலாளர்டோரு இவாகாமி, இயக்குநர்,டோரு ஒனோடா, தலைமை நிதி அதிகாரிகுர்விந்தர் சிங், சென்னையில் உள்ள ஜப்பான் நாட்டுத் தூதர்கள்முனியோ டகாஹாஷி மற்றும்நஓகோ யுசாவா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கும்மிடிப்பூண்டியில் மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின்

# குளிர்சாதன இயந்திரங்கள் - காற்றழுத்தக் கருவிகள் உற்பத்தி ஆலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப்.7-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.02.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் 2091 கோடி ரூபாய் முதலீட்டில், 2104 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் அமைத்துள்ள, அறைகளுக்கான குளிர் சாதன இயந்திரங்கள் (Room Air Conditioners) மற்றும் காற்றழுத்தக் கருவிகள் (Compressors) உற்பத்தி ஆலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு, இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் முதன்மை மாநிலமாகவும், தொழில் வளர்ச்சியில். முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும் விளங்கி வருகிறது. மாநிலத்தில் முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் இளைஞர்கள் மற்றும் மகளிர்க்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மாநில பொருளாதாரத்தை மேன்மேலும் மேம்படுத்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

**மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட்** ஜப்பான் நாட்டை சேர்ந்த மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன், ஆற்றல் மற்றும் மின்சார அமைப்புகள், தொழில்துறை ஆட்டோமேஷன், தகவல் மற்றும் தொடர்பு அமைப்பு கள், வீட்டு உபயோகப் பொருட்கள், மின்சார மற்றும் மின்னணு உபகரணங்களை தயாரிப்பதில் இணையற்ற நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளது. மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட், இந்த உலகளாவிய முன்னணி நிறுவனத்தின் துணை நிறுவனமாகும்.

இந்நிறுவனம், 2091 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 2104 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், அறைகளுக்கான குளிர் சாதன இயந்திரங்கள் (Room Air Conditioners) மற்றும் காற்றழுத்தக் கருவிகள் (Compressors) உற்பத்தி ஆலை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 2023ஆம் ஆண்டு மே மாதம் மற்றும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதங்களில் மேற்கொள்ளப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக, 2023ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட நிகழ்வானது, திட்டங்கள் செயல்பாட்டு நிலைக்கு முன்னேற்றம் பெற, அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில் Mitsubishi Electric நிறுவனம் அமைத்துள்ள இத்தொழிற்சாலை, இந்தியாவில் அதன் முதலாவது அறைகளுக்கான குளிர் சாதன இயந்திரங்கள் (Room Air Conditioners) உற்பத்தி ஆலை என்பது குறிப்பிடத்தக்கது. வெளிப்புற அலகுகள், உட்புற அலகுகள் மற்றும் காற்றழுத்தக் கருவிகள் (Compressors) ஒரே இடத்தில் உற்பத்தி செய்யும் முதலாவது தொழிற்சாலையாகவும் இது இருக்கும். இந்நிறுவனம், இத்திட்டத்தில் இதுவரை 1633 கோடி ரூபாய் முதலீடு மேற்கொண்டுள்ளதுடன், 200க்கும் மேற்பட்ட மகளிர் உட்பட 629 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் அளித்துள்ளது.

இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, கியோர் கலந்து கொண்டனர்.


காணொலிக் காட்சி வாயிலாக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் குழுமத் தலைவர் திரு. மசாஃபுமி அண்டோ, மிட்சுபிஷி எலக்ட்ரிக் சிங்கப்பூர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தோஷிமிட்சு இட்டோ, மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்திய நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அட்சுஷி டகாசே, பொது மேலாளர் டோரு இவாகாமி, இயக்குநர், டோரு ஒனோடா, தலைமை நிதி அதிகாரி குர்விந்தர் சிங், சென்னையில் உள்ள ஜப்பான் நாட்டுத் தூதர்கள் முனியோ டகாஹாஷி மற்றும் நஓகோ யுசாவா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 42 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 சமத்துவபுரங்கள், நாமக்கல் மாவட்டம், புதுப்பட்டி முதல் கெடமலை வரை 34 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சாலை, 212 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடங்கள், பாலங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக்கூடங்கள், பொது விநியோகக் கடைகள், என மொத்தம் 289 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர் லலித் ஆதித்ய நீலம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று(6.2.2026) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 348 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்ட தலைமை மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள், நுண்ணுயிரியல் ஆய்வுக்கூடங்கள், இந்திய மற்றும் ஓமியோபதி பிரிவுக் கட்டடங்கள், நகர்ப்புற, கிராமப்புற மற்றும் பல்வேறு சுகாதார நிலையக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர்நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாடு இயக்குநர் (பொறுப்பு) ஆர். லால்வேனா, தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மருத்துவர் எஸ்.வினீத், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர்அருண் தம்புராஜ், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி எம். விஜயலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு.த.க.சித்ரா, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு துறை இயக்குநர் மரு. சோமசுந்தரம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஆர். சுகந்தி ராஜகுமாரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில், தமிழ்நாடு மாநிலத்திற்கான நகர்ப்புற பசுமையாக்கல் கொள்கை – 2026 யை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் முதன்மை தலைமை வன பாதுகாவலரும் தலைமை இயக்குநருமான ஐ. அன்வர்தீன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இன்று — விருதுநகர் — கல்குறிச்சியில் நடைபெறுகிறது!

# தி.மு.க. இளைஞர் அணி தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

## ஊடகங்களுக்கு — தி.மு.க. இளைஞர் அணி அன்பு வேண்டுகோள்!

**இன்று - விருதுநகர் கல்குறிச்சியில், “தி.மு.க. இளைஞர் அணி தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு” நடைபெறுகிறது.**

**இம்மாபெரும் நிகழ்வையொட்டி, தி.மு.க. இளைஞர் அணி, அனைத்து ஊடகங்களுக்கும் அன்பான வேண்டுகோள் விடுத்துள்ளது.**

**அது வருமாறு:**

அன்புடையீர் வணக்கம். 75 ஆண்டுகளைக் கடந்து தமிழர்களின் மேம்பாட்டை முன்னிறுத்தி தன் அரசியல் பயணத்தை மேற்கொள்ளும் திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு எப்போதும் பக்கபலமாக இருப்பது, கழக இளைஞர் அணி.

1980ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிகாட்டலில், இன்றைய கழகத்தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட கழக இளைஞர் அணி, கழகத்துக்கு வலிமை சேர்த்து களத்தில் தொடர்ந்து செயல்பட்டுவருகிறது. இன்று தமிழ்நாடு முழுவதும் தலைமைக்கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என கணிசமான கழக செயல்வீரர்கள் இளைஞர் அணி பாசறையில் பட்டை தீட்டப்பட்டவர்களே.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைகளைத் திசையெங்கும் கொண்டு செல்லும் கருத்தியல் பணிகள் ஒருபுறம், கட்டமைப்பை வலுப்படுத்தி கழகத்தின் வெற்றிகளுக்குத் துணைநிற்கும் அரசியல் பணிகள் இன்னொருபுறம் என்று இடைவிடாது இயங்கிக்கொண்டிருக்கிறது இளைஞர் அணி.

கழக இளைஞர் அணி செயலாளராக மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாளில் இருந்து திராவிட மாடல் பயிற்சி பாசறைக் கூட்டங்கள், சட்டமன்றத்தொகுதிதோறும் கலைஞர் நூலகம், திராவிட இயக்க வரலாற்றுச் சுவடுகளைப் பதியும் ‘முரசொலி பாசறை பக்கம்’, வரலாற்றை நினைவுகூர்ந்து வாசிப்பை விரிவு செய்யும் ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’, திசையெங்கும் திராவிடத்தைக் கொண்டு சேர்க்கும் 200க்கும் மேற்பட்ட இளம் பேச்சாளர்கள், 75 ஆண்டுக்கால தி.மு.க வரலாற்றுப் பங்களிப்புகளை 1120 பக்கங்களில் விவரிக்கும் ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூல், சமீபத்தில் தமிழ்நாடே கொண்டாடிய அறிவுத்திருவிழா, முற்போக்கு புத்தகக்காட்சி என்று இளைஞர் அணி தொடர்ந்து கருத்தியல் பணிகளை ஆற்றி வருகிறது.

இன்னொருபுறம் குடியுரிமை திருத்த சட்டத்தை எதிர்த்து போராட்டம், நீட் தேர்வை ஒழிக்க வலியுறுத்தி மாவட்ட தலைநகரங்களில் உண்ணாவிரதம், நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கம், தொகுதி மறுசீரமைப்பு இந்தி திணிப்பு எதிர்ப்பு நிதி ஒதுக்குவதில் ஒன்றிய அரசின் பாரபட்சம் ஆகியவற்றைக் கண்டித்து தெருமுனைக்கூட்டங்கள் என்று மக்கள் பிரச்சினைகளுக்காகவும் கழக இளைஞர் அணி தொடர்ந்து களத்தில் நிற்கிறது என்றால் அதற்கு காரணம், இளைஞர் அணியின் வலுவான கட்டமைப்பே.

வழக்கமான நிர்வாக அமைப்புடன் இந்த ஆண்டு கழகத்தலைவர் வழிகாட்டலில், இரண்டு புதிய முன்னெடுப்புகளையும் கழக இளைஞர் அணி மேற்கொண்டிருக்கிறது. இளைஞர் அணியின் சமூகவலைதளப் பக்கங்களை நிர்வகிப்பதற்கு என்று ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் சமூகவலைதளங்களுக்கான துணை அமைப்பாளர்களை நியமித்துவருகிறோம்.

ஒன்றியத்துக்கு உள்பட்ட கிளைகளிலும் நகர, பகுதி, பேரூர், வார்டுகளிலும் அனைத்து பாகங்களிலும் இளைஞர் அணிக்கு நிர்வாகிகளை நியமித்திருக்கிறோம். இப்படி, தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் இளைஞர் அணி நிர்வாகிகளைக் கொண்ட வலுவான அணியாக தமிழ்நாட்டின் எல்லாத்திசைகளிலும் வேர் விட்டிருக்கிறது கழக இளைஞர் அணி.

இவ்வாறு 5 லட்சம் நிர்வாகிகள், 50 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என்று வலுவான கட்டமைப்பைக் கொண்டு செயற்படும் இளைஞர் அமைப்பு, இந்திய அளவில் தி.மு.க இளைஞர் அணி மட்டுமே. பல அரசியல் கட்சிகள் வாக்குச்சாவடி முகவர்களை நியமிப்பதற்கே திணறிக்கொண்டிருக்கும் சூழலில், அனைத்து பாகங்களிலும் நிர்வாகிகளை நியமித்திருப்பது கழக இளைஞர் அணியே.

இப்படி நியமிக்கப்பட்ட 5 லட்சம் நிர்வாகிகளை ஒன்றிணைத்து மண்டலம்தோறும் நிர்வாகிகள் சந்திப்பை நடத்த வேண்டும் என்ற கழகத்தலைவர் உத்தரவின்பேரில், முதற்கட்டமாக வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பை 14.12.2025, ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4 மணியளவில் திருவண்ணாமலை கலைஞர் திடலில் எழுச்சியுடன் நடத்தினோம். 1.50 லட்சம் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

அதன் அடுத்த கட்டமாக தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பை 07.02.2026, சனிக்கிழமை அன்று மாலை 3 மணியளவில், விருதுநகர் – கல்குறிச்சியில் நடத்தவிருக்கிறோம். இந்த ‘தென் மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்’பில் கழகத்தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புரை ஆற்றவிருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத்தலைவரே மீண்டும் முதலமைச்சர் ஆவார், திராவிட மாடல் ஆட்சியே தொடரும் என்னும் வெற்றிச்செய்திக்கு அடித்தளமாக இந்த ‘இளைஞர் அணி மண்டல நிர்வாகிகள் சந்திப்பு’ அமையும் என்பது உறுதி.

இந்த நிகழ்ச்சியில் பத்திரிகையாளர்கள் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு தென் மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி குறித்த செய்தியை தங்கள் பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் வெளியிட்டு உதவுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தி.மு.க. இளைஞர் அணி கேட்டுக்கொண்டுள்ளது.